# 17 திருவிவிலியத்துடன் நம் வாழ்வு

இஸ்ரயேல் மக்கள் நாடோடிகளாய், மந்தை மேய்ப்போராய் கூட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்தமையை நாம் அறிந்துள்ளோம். இவர்கள் பழைய நிகழ்வுகளை செவிவழிப் பாரம்பரியமாகக் கூறியிருக்கலாம். **ஒரே கடவுள்** கொள்கை உடையோராய் இருந்தனர். எஸ்தர், ரூத், யோபு போன்றோரின் கதைகளை உள்ளடக்கியுள்ளது. இவர்கள் மோசேயின் நீதிச் சட்டங்களையும் பின்பற்றி வாழ்ந்தவர்கள் போன்ற பல இத்தகவல்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலால் உருவாக்கப்பட்டதே பைபிள் ஆகும். கிரேக்க மொழியில் 'பிப்லொஸ்' என்ற சொல்லில் இருந்து வருகிறது. 1500 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் திருவிவிலியம் எழுதப்பட்டது.

**பழைய ஏற்பாட்டு நூல்கள்**

*பஞ்சாகமங்கள், தோரா /மோசேயின் நீதிச் சட்டங்கள் (5),*

*முந்திய இறைவாக்கினர்கள்(7)*

*வரலாற்று நூல்கள் (4)*

*இலக்கியநூல்கள் (6)*

*பிந்திய இறைவாக்கினர்கள் (17)*




## பழைய ஏற்பாடு

- 39 நூல்கள் அடங்கியுள்ளன.
- பல ஆசிரியர்களினால் எழுதப்பட்டதாகும்.
- 1455ம் ஆண்டில் அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபின் நூலுருவம் பெற்றது.



## புதிய ஏற்பாடு

27 நூல்களை உள்ளடக்கியதாகும். பலநூல்கள் முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டன. கி.பி 397 இல் நடைபெற்ற ‘காத்தேஜ்’ மகாநாட்டில் 27 நூல்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**புதிய ஏற்பாட்டு நூல்கள்**

*நற்செய்தி நூல்கள் 4*

*திருத்தூதர்பணி 1, பவுலின் நிருபங்கள் 13*

*வேறு கிறிஸ்தவ தலைவர்களின் திருமுகங்கள் 8*

*தரிசன இலக்கியநூல் 1*

*இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, போதனை, மரணம் உயிர்த்தெழுதல் விண்ணேற்பு குறிப்பிடப்பட்டுள்ளன. தூய ஆவியின் வல்லமையினால் கிறிஸ்தவ விழுமியங்கள் வாழ்வை கட்டி எழுப்பக் கூடியனவாக உள்ளன.*




வேதாகமம் 2000 க்கு அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூலாகும். இன்று திருவிவிலியத்தை நம் வீடுகளில் எதற்காக வைத்துள்ளோம்?

மறைநூல் அனைத்தும் கடவுளின் ஏவுதலால் எழுதப்பட்டுள்ளது. அது கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது.

***வாசிப்போம்***
***2 தீமொத்தேயு 3 : 16, 17***

திருவிவிலியம் எழுதப்பட்டதற்கான நோக்கத்தை யோவான் 20 : 31 வாசித்து தெரிந்துகொள்வோம்.

**திருவிலியத்தில் இயேசுவின் போதனைகள்**

1 தன்னலமற்ற இயேசுக்கிறிஸ்துவின் தியாக அன்பு மனுக்குலத்தை விடுவிக்கின்றது..
2. பிறருக்கு உதவியளிக்க வழிகாட்டுகிறது.
3. நீதிக்காக செயற்பட வழிகாட்டுகின்றது.
4. எல்லோருடனும் ஒற்றுமையாக வாழ வழிகாட்டுகிறது.


வேதம் வாசித்தல்


தியானித்தல்



செபம் செய்தல்

ஆவியின் கனிகள் கலாத்தியர் 5 : 22-23

பலதரப்பட்ட சூழலில் நாம் சமூகத்தில் ஒற்றுமையுடன் இறையரசிற்குரிய பிள்ளைகளாக வாழ்ந்தால் நாட்டில் அமைதி சமாதானம் நிலவும்.

## தெரிந்து கொள்வோம்

| | |
|---|---|
| திருவிவிலியம் மொத்த நூல்கள் | 66 |
| பழைய ஏற்பாட்டு நூல்கள் | 39 |
| புதிய ஏற்பாட்டு நூல்கள் | 27 |
| மொத்த அதிகாரங்கள் | 1189 |
| மொத்த வசனங்கள் | 31173 |
| மத்தியிலுள்ள வசனம் | திருப்பாடல்கள் 118 : 8 |
| பெரிய வசனம் | எஸ்தர் 8 : 9 |
| சிறிய வசனம் | யோவான் 11 : 35 |

**வாசியுங்கள்**
**2 பேதுரு 1 : 19, 20, 21**

- ☞ திருவிவிலியம் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது.
- ☞ இயேசு கிறிஸ்துவுக்கும் மக்களுக்கும் இடையே உருவான விசுவாசம், அன்பின் வெளிப்பாடாகும்.
- ☞ **வேதாகமத்திலிருந்து கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியவைகள்**
  - ➢ கடவுளை வணங்குதல், துதிசெய்தல்
  - ➢ இயேசுவின் மீட்பின் செயல்களை அறிந்து கொள்ளல்.
  - ➢ வேதாகமத்தின் மூலமாக தீய வழிகளிலிருந்து விடுபட்டு நல்வழியில் செல்லுதல்.



## செயன்முறை

**வாசிப்போம் சிந்திப்போம்**
எபிரேயர் 1 : 1 -3

## செயற்பாடு

1. *திருவிவிலியத்தில் அடங்கியுள்ள நூல்களை ஆசிரியரின் உதவியுடன் முக்கிய தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துக.*
2. *“எமது வாழ்வில் திருவிவிலியம்” என்ற தலைப்பில் கவிதை எழுதுக.*